# ஆதிசுன்சுனாகிரி காலபைரவர் ஆலயம்

## சாந்திப்பிரியா





பெங்களூரிலிருந்து 100 கி.மீ தூரத்தில் உள்ள கர்நாடகாவின் மாண்டியா எனும் மாவட்டத்தில் உள்ள நாகமங்கலத்தில் உள்ள ஒரு மலை நகரமாகும் மஹாசமஸ்தான மடம் என்று அழைக்கப்படும் ஆதிச்சுஞ்சனகிரி. 3,300 அடி உயரத்தில் அமைந்துள்ள இந்த இடம் அடர்ந்த காடுகளால் சூழப்பட்ட து. ஸ்ரீ ஆதிசுன்சுனகிரியின் 71 ஆவது பீடாதிபதியாக பொறுப்பேற்ற பின்னர், ஸ்ரீ ஆதிசுன்சுனகிரி காலபைரவர் ஆலயம் என்று அழைக்கப்படும் ஒரு அற்புதமான ஆலயம் ஸ்ரீ ஸ்ரீ பாலகங்கதார மஹா ஸ்வாமிஜி அவர்களால் கட்டப்பட்டுள்ளது. அவர் 1973 ஆம் ஆண்டில் சமாதி அடைந்து விட்டார். ஆன்மீகம் மற்றும் பொது வாழ்க்கை குறித்த ஆலோசனைகளுக்காக பல பிரபலனமான நபர்கள் அவரைச் சந்தித்து அவருடைய ஆலோசனைகளை பெறுவது உண்டு என்றாலும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிகள் அவர்களோ கிராமப்புற

மக்களின் அடிப்படைத் தேவைகளில் கல்வி மற்றும் நோயற்ற வாழ்வைக் குறித்தே தமது கவனத்தை செலுத்தி வந்தார்.

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் சிவபெருமான் இந்த ஷேத்திரத்தில் தவத்தில் இருந்த பொழுது அந்த இடத்தில் இருந்த அனைத்து மக்களையும் துன்புறுத்திக் கொண்டு இருந்த சுன்சா மற்றும் குன்சா என்ற இரண்டு அசுரர்களை வதம் செய்தார். அதன் பின்னர் அவர் நாத் என்ற ஒரு சம்பிரதாயத்தை நிறுவி, மக்களின் அறியாமையை விலக்கி, அவர்களை நல்வழியில் அழைத்துச் செல்ல சித்த யோகி ஒருவரிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்தார். அவர் அங்கு ஒரு மடத்தை ஸ்தாபனம் செய்தாராம். சிவபெருமான் தவத்தில் அமர்ந்து இருந்த இடத்தின் பெயரை ஜ்வாலபீடம் அதாவது நெருப்பு பீடம் எனக் கூறுகின்றார்கள். அந்த அசுரர்களை வாதம் செய்த பின்னர் அங்கிருந்த மக்கள் முன் தோன்றிய பகவான் சிவபெருமான் 'ஆதிசுன்சனாகிரி என்ற ஸ்ரீ அந்த ஷேத்திரத்தில் தானே பஞ்ச லிங்கமாக அதாவது பகவான் கங்காதீஸ்வரர், பகவான் சந்திர மௌரீஸ்வரர், பகவான் மல்லீஸ்வரர், பகவான் சித்தீஷ்வரர் மற்றும் பகவான் சோமேஷ்வரர் என்ற பெயரில் வசித்துக் கொண்டு இருந்தவாறு அங்கு வரும் பக்தர்களுக்கு அருள் செய்து கொண்டு இருப்பேன் என்று உறுதி கூறினார். ஆகவே அந்த இடத்திற்கு பஞ்சலிங்க ஷேத்திரம் என்ற பெயரும் ஏற்பட்டது. இந்த ஷேத்திரத்தைக் குறித்து சிவ புராணத்தில் குறிப்பு உள்ளதாம்.

இந்த ஆலயத்தின் மேன்மையைக் குறித்த இன்னொரு புராணக் கதை இது. முன்னொரு காலத்தில் இந்த ஆலயத்தின் அருகில் இருந்த நாட்டை ஆண்டு வந்த மன்னனுக்கு குழந்தை பாக்கியம் இல்லாமல் இருந்தது. அவன் தனக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தால் சிவனுக்கு மூங்கிலினால் ஆன தொட்டில் கட்டித் தருவதாக வேண்டிக் கொண்டானாம். ஆகவே தனது சேவகர்களை அருகில் இருந்த காட்டிற்கு சென்று மூங்கில்களை வெட்டி வருமாறு அனுப்ப, அவர்களும் அங்கு சென்று புதராக இருந்த மூங்கில் மரங்களை வெட்டினார்கள். அப்போது அவர்களது வாளில் ரத்தக் கரை ஏற்பட்டது. பயந்து

போய் நின்ற அவர்களுக்கு வானத்தில் இருந்து வந்த குரலில் ஒரு அசரி அந்த இடத்தில் சிவபெருமான் தவத்தில் அமர்ந்து கொண்டு இருப்பதாகவும், நடந்து விட்ட தவறுக்காக உடனே கிளம்பிச் சென்று அவர்கள் செய்துவிட்ட தவறினால் ராஜ்யத்திற்கு ஏற்பட்டு விட்ட சாபத்தை களைய அங்கு ஒரு ஆலயத்தை அமைக்குமாறு மன்னனிடம் கூறுமாறும், திரும்பிப் போகும் சேவகர்கள் பின்னால் திரும்பிப் பார்க்கக் கூடாது எனவும் ஆணையிட்டதாம். ஆனால் சற்று தூரம் சென்ற சேவகர்கள் தம்மை யாரேனும் தொடர்ந்து வருகின்றனரா என்ற பயத்தினால் திரும்பிப் பார்த்தவுடன் மரணம் அடைந்து விழுந்தனராம். அதனால்தான் அவர்களது நினைவாக ஆலயத்தின் முன் இரு சிலைகள் வைக்கப்பட்டதாம்.

அந்த லிங்களில் மூல லிங்கமாக கங்காதீஸ்வரரும்ää ஆத்மார்த்த லிங்கமாக சந்திர மௌரீஸ்வரரும் இருக்கää அந்த இடம் பஞ்சலிங்க ஷேத்திரம்; என்ற பெருமைப் பெற்றது. அந்த மலை மீது உள்ள இரண்டு ஆலயத்தின் ஒன்றில் உள்ள பெரிய சோமேஸ்வரர் ஆலயத்தில் உள்ள சிவலிங்கமே சோமேஸ்வரர் என அழைக்கப்பட்டுகின்றது. மிகவும் இருட்டான இடத்தில் அமைந்துள்ள அந்த லிங்கத்தை தரிசிக்க பக்தர்கள் விளக்குகளை கொண்டு செல்கின்றனர். மற்றும் ஒரு ஆலயம் கவி கங்காதீஸ்வரர் ஆகும். அங்குள்ள சுமார் பத்து கிலோ எடையுள்ள நந்தியை பக்தர்கள் விஷேசமாகக் கருதி வணங்குகின்றனர். கங்காதீஸ்வரர் ஆலயம் செல்வதற்கு முன்னதாகவே இப்படிப்பட்ட பெருமை நிறைந்த இடத்தில் ஆலயம் அமைத்தது பெரிய ஆச்சரியமான விஷயம் ஆகும். அந்த ஆலயத்தல் ஒரு மூங்கில் தொட்டில் உள்ளது.

முன்னர் இருந்த பகவான் காலபைரவர் ஆலயத்தை மேன்மை மிகு ஸ்ரீ ஸ்ரீ பாலகங்காதர ஸ்வாமி அவர்கள் அற்புதமாக புனர் அமைத்து உள்ளார். பகவான் காலபைரவர் ஆலயத்தை சுற்றிலும் நூற்றுக்கும் அதிகமான பகவான் சிவபெருமானின் உருவங்கள் நிறுவப்பட்டு உள்ளன. ஆலயத்தின் மிக முக்கியமான அம்சமே பகவான் கால பைரவருடைய வாகனமான தெய்வீக நாய் ஒன்றின் சிலையை நந்தி தேவரின் கருவறைக்கு எதிரில் நிறுவி

உள்ளார்கள். ஆலயத்தில் பகவான் காலபைரவருடைய அறுபத்தி நான்கு விதவிதமான கோலச் சிலைகள் வைக்கப்பட்டு உள்ளன. அதில் மூலச் சிலையின் உயரம் பதினோறு அடியாகும். ஆலயத்தின் மற்றும் ஒரு சிறப்பு அம்சம் 23 அடி உயர பகவான் நாகலிங்கேஸ்வரர் ஆகும். பகவான் காலபைரவருக்கு வலப்புற சன்னதியில் அற்புதமான நிலையில் அவர் காணப்படுகின்றார். பகவான் கால பைரவரின் இடப்புற சன்னதியில் ஸ்தம்பிகா தேவியின் சன்னதி உள்ளது. அங்கு வந்து அவளை வணங்குபவர்களுக்கு பிள்ளையில்லா குறையும், திருமணத் தடைகளும் விலகுவதாக நம்பப்படுகின்றது.

ஆதிச்சுஞ்சனகிரி பகவான் கால பைரவர் ஆலயத்தில் வழிபடப்படும் பிரதான இறைவன் பகவான் கங்காதரேஸ்வரர் ஆவார். கோயிலின் தனித்துவமான அம்சம் என்னவென்றால், தெய்வீக நந்திக்கு பதிலாக, பகவான் கால பைரவருடைய தெய்வீக வாகனமாக நாய் ஒன்றை தெய்வீக நந்தி தேவருக்கு பதிலாக பிரதிஷ்டை செய்து உள்ளார்கள் என்பதின் காரணம் பகவான் பைரவருடைய தெய்வீக வாகனம் ஒரு நாய் ஆகும்.

சுமார் 275 அடி அகலமும் 175 அடி நீளமும் உள்ள ஆலயத்தில் நான்கு நுழை வாயில்கள் உள்ளன. மூல நுழை வாயில் 100 மீட்டர் உயரத்தில் கட்டப்பட்டு உள்ளது. ஆலய நுழை வாயிலில் உள்ள ராஜகோபுரமும் நூறு அடி உயரமானது. அங்குள்ள நதியின் மேல் பகுதியில் அமர்ந்து உள்ள பகவான் கங்காதீஸ்வரருடைய தலை முடியில் இருந்து வெளிவரும் புனித நீரால் ஓடும் அந்த ஓடையில் பக்தர்கள் தங்களுடைய அறியாமையை விலக்கிக் கொள்ளவும் பாவங்களைத் துடைத்துக் கொள்ளவும் நீராடுகின்றனர்.

# Adichunchanagiri Lord Kala Bhairava Temple

## Santhipriya





Adichunchanagiri, also called Mahasamsthana Math, is a hill township in Nagamangala in, Mandya District of Karnataka, about 100 km from Bangalore and situated at a height of 3,300 feet, surrounded by dense forest. A magnificent temple called Adichunchanagiri Kalabhairava Temple has been built there by Sri Sri Balagangadhara Maha Swamiji, after he assumed charge as the 71st Prelate of Sri Adisunsunagiri. He is no more and attained samadhi in the year 1973. Many leading personalities used to visit him for his advice on spirituality and public life. Besides Shri Shri Swami focused on the basic needs of the rural people, both to uplift their education and lead a disease-free life.

It is believed that several centuries ago Lord Shiva performed penance in the nearby jungle, during which time he annihilated two demon brothers called Chuncha and Kancha who tortured and troubled people in the nearby villages for a long time. As per a legend Lord Adi Rudra (Lord Shiva in another form) established the community called Nath and handed over the Kshetra to a Siddha Yogi who subsequently established a Mutt here. The place where Lord Shiva meditated is called Jwala Peet i.e Fire Peet. After annihilating those two demons, Lord Shiva assured people that he would continue to reside in Adichunchanagiri in the form of Pancha Lingas - Lord Gangadhareshwara, Lord Chandramouleshwara, Lord Malleshwara, Lord Siddeshwara, and Lord Someshwara- to guard and bless the people who visit there. Hence the place also came to be known as 'Pancha Linga Kshetra'. As per the folklore the Shiva purana has references on this Kshetra.

There is an interesting story on the greatness of this site. Once upon a time there lived a King nearby to Adichunchanagiri. Since he had no progeny, he prayed to Lord Shiva that he would offer a cradle made of bamboo to him if he got a child. He sent his servants to bring bamboo sticks from the nearby forest to build a cradle and when they went to the forest to cut few bamboo trees in a bush, blood strains were seen in their swords followed by an unknown voice from the air which told the servants that Lord Shiva was on penance there and since they had unnecessarily cut the bush where the Lord was in penance, they should go back and tell their King to construct an temple on that spot to get rid of the curse befallen on his Kingdom due to that heinous act. Further the unknown voice

warned them that while going back, if they turn back to see the place again, they would lose their life. But after walking some distance when the frightened servants turned back to see whether someone is following them, they fell dead. Hence as mark of respect to both of them two human statues have been enshrined in the entrance of the temple.

His holiness Sri Sri Balagangadhara Maha Swamiji, has built this wonderful Lord Kalabhairava Temple which has encompassed more than hundred statues of Lord Shiva in various postures. Sixty-four different statues of Lord Kala Bhairava have also been enshrined inside the temple. The height of the prime deity is eleven feet and another interesting aspect inside the temple has been the statue for Lord Nagalingeswar which is 23 feet high and seated in the next sanctum to Lord Kala Bhairava. On the left side sanctum of the sanctum of Lord Kala Bhairava is Goddess Sthambika Devi. Those with no progeny or their marriage proposals getting delayed, come there and worship the Goddess here seeking her grace to remove their hurdles and to get progeny.

The prime Lord worshipped in the Adichunchanagiri Kalabhairava Temple has been Lord Gangadhareshwara. The unique feature of the temple is that instead of Divine Nandi, a Divine Dog has been enshrined in front of the sanctum sanctorum of Lord kala Bhairava since dog has been the divine vehicle carrier of Lord Kala Bhairava.

The temple is about 275 feet wide and 175 feet long and has four entrances. The main entrance gate is built at a height of 100 meters. The royal tower at the

entrance of the temple is also one hundred feet high. The devotees who visit the temple take bath in the holy water gushing out of the hair of Lord Gangadeeswara, who is seated several feet high in the upper part of the nearby river to ward off their ignorance and wipe away their sins.